[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 மார்ச் 23

80 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

39. தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்பட்டால்தான் மாணவர்களின் மேல் வகுப்புக் கல்வி சிறப்பாக அமையும். அந்த நோக்கில், செயல்வழி முறையில் கற்பதனால் மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்துகொண்டு கற்க இயலும் என்பதால், இம்முறை தமிழகத்திலுள்ள அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் உள்ள 1 முதல் 4 வகுப்புகளில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

40. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 24,642 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, மேலும், 8,837 ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரமான கல்வியை உறுதி செய்யும் வகையில் 7,979 புதிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அனைத்து ஆசிரியர் பணியிடங்களும் வேலைவாய்ப்பகங்கள் மூலம் காலமுறை ஊதியத்தில் நிரப்பப்பட்டு வருகின்றன. 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 20 நாள் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.

41. கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர், சேலம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் மாணவர்கள் குறைவான சதவீதத்தில் தேர்ச்சி பெற்ற பள்ளிகளைக் கண்டறிந்து அப்பள்ளி மாணவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ரூபாய் 123 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

42. 1999–2000 ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில்தான் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. வரும் கல்வி ஆண்டில், தமிழகத்திலுள்ள 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ரூபாய் 118 கோடி செலவில் கணினிப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மேலும், மாணவர்களின் ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 130 இலட்சம் செலவில் ஆங்கில மொழி பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

43. தமிழ் வழிக் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து

2007 மார்ச் 23] [பேராசிரியர் க. அன்பழகன்]

விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 7,057 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

## நூலகங்கள்

44. தற்கால அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்றுப் பின்னணி கொண்ட பனுவல்கள் மற்றும் மேற்கோள் தொகுப்புகள் போன்றன சாதாரண மக்களுக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கும் நிலையை மாற்றிட, இவை அனைத்தும் அவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், சென்னையில் சர்வதேசத் தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்றை இந்த அரசு அமைக்கும். அனைத்து நூல்கள் மற்றும் இணைய வெளியீடுகளோடு, நவீனக் கட்டமைப்பு வசதிகள் கொண்ட மாபெரும் மாதிரி நூலகமாக இது அமையப்பெறும். ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் இந்நூலகத்திற்கு நூலக ஆணையத்தின் பங்களிப்பாக ரூபாய் 80 கோடியும், அரசின் பங்களிப்பாக ரூபாய் 20 கோடியும் இருக்கும்.

45. புத்தக ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நூல் வெளியீட்டாளர்களின் வேண்டுகோளை ஏற்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தவாறு, அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்துடன், சென்னையில் மாபெரும் 'புத்தகப் பூங்கா' ஒன்றை நூல் வெளியீட்டுக் குழுவினர் அமைத்திட, அரசு நிலம் வழங்கி ஆதரவு தரும்.

## உயர் கல்வி

46. தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, மாணவர்களுக்குத் தேவையற்ற கூடுதல் சுமையாக உள்ள தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வை அகற்றி, கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நகர்ப்புற மாணவர்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் நோக்குடன், இது குறித்து இவ்வரசால் அமைக்கப்பட்ட கல்வியாளர் குழுவின் பரிந்துரைகளின்படி இத்தேர்வை நீக்குவதற்கான சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து, கிராமப்புற மாணவர்களின் கனவை நனவாக்கும் வண்ணம் தி.மு.கழகத்தின்